**அக்டோபர் – 20**

# TNPSC துளிகள்

- கூகுள் டீப்மைண்ட் நிறுவனமானது சிக்கலான மென்பொருள் பொறியியல், வணிகம், சட்டம், நிதி மற்றும் இணைய பாதுகாப்புப் பணிகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஜெமினி 4 ஆர்கான் (Gemini 4 Argon) என்ற மேம்பட்ட செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரியை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தியது.
- தெற்கு ரயில்வேயானது தமிழ்நாட்டின் முதல் விஸ்டாடோம் (Vistadome) பெட்டியை மதுரை-குருவாயூர் விரைவு ரயிலில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 22 முதல் 2027 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் தேதி வரை சோதனை அடிப்படையில் அறிமுகப் படுத்த உள்ளது.
- பண்டிகைக் காலத்திற்கு முன்பாக வெங்காயத்தின் இருப்பை மேம்படுத்தவும், விலையைக் கட்டுப்படுத்தவும் சுமார் 440 மெட்ரிக் டன் வெங்காயத்தை ஏற்றிச் செல்லும் முதல் காந்தா விரைவு ரயிலை (Kanda Express) நுகர்வோர் விவகாரங்கள் துறை திரிபுராவின் அகர்தலாவிற்குத் தொடங்கி வைத்துள்ளது.
    - இந்த முன்னெடுப்பானது வெங்காய விநியோகத்தை மேம்படுத்தவும், விலையை கட்டுப்படியாகக் கூடிய வகையில் வைத்திருக்கவும் விலை நிலைப்படுத்தல் நிதியத்தின் (PSF) கீழ் வெங்காய இருப்புகளை விநியோகிக்கிறது.
- உலகளவில் பெண்களுக்கான மாதவிடாய் நிறுத்தம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஆதரவு மற்றும் கவனிப்பை மேம்படுத்தவும் ஆண்டுதோறும் அக்டோபர் 18 அன்று உலக மாதவிடாய் நிறுத்த தினம் அனுசரிக்கப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Chronic Pain at Midlife என்பதாகும்.
- தகவலறிந்த முடிவெடுத்தல் மற்றும் நிலையான மேம்பாட்டிற்கான நம்பகமான புள்ளிவிவரங்கள் மற்றும் தரவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 20 அன்று உலகப் புள்ளிவிவர தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தேசியச் செய்திகள்

## தேசிய உத்திசார் வர்த்தகக் கட்டுப்பாட்டு மையம்

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சரால் புது தில்லியில் உள்ள வாணிஜ்ய பவனில் தேசிய உத்திசார் வர்த்தகக் கட்டுப்பாட்டு மையம் (NSTCC) தொடங்கப் பட்டது.
- இந்த மையமானது வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரகத்தின் (DGFT) ஒருங்கிணைப்புடன், வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள வர்த்தகத் துறையால் உருவாக்கப்பட்ட மையப்படுத்தப்பட்ட வர்த்தக நுண்ணறிவு மற்றும் தரவுப் பகுப்பாய்வு மையமாகும்.
- நிகழ்நேர வர்த்தக கண்காணிப்பு, சான்று அடிப்படையிலான கொள்கை உருவாக்கம், அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் விரைவான வர்த்தக அனுமதிகளை செயல் படுத்துவது இதன் நோக்கமாகும்.
- இது இறக்குமதியாளர் ஏற்றுமதியாளர் குறியீடு (IEC), முன்கூட்டிய அங்கீகாரம், ஏற்றுமதி மேம்பாட்டு மூலதனப் பொருட்கள் (EPCG) திட்டம் மற்றும் தோற்றச் சான்றிதழ்கள் (CoO) ஆகியவற்றைக் கண்காணிக்கிறது.

- ❖ சிறப்பு இரசாயனங்கள், உயிரினங்கள், பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தொழில் நுட்பங்களுக்கான (SCOMET) உரிமங்கள், ஏற்றுமதிக் கடமைகள், ஒழுங்குமுறை இணக்கம் மற்றும் தயாரிப்புகள் மற்றும் சந்தைகள் முழுவதும் வர்த்தக செயல்திறன் ஆகியவற்றை இது கண்காணிக்கிறது.
- ❖ இது வெளிநாட்டு வர்த்தக தலைமை இயக்குநரக (DGFT) இணையதளம் மற்றும் வர்த்தக இணைப்பு மின்-தளம் (Trade Connect ePlatform) ஆகியவற்றிலிருந்து தரவை ஒருங்கிணைத்து, வர்த்தகத் தடைகள், வளர்ந்து வரும் ஏற்றுமதி சந்தைகள் மற்றும் பயன்படுத்தப்படாத தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களை (FTAs) அடையாளம் காண உதவுகிறது.




## புதிய உணவுப் பாதுகாப்பு விதிகள் 2026




- ❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது (FSSAI) உணவுப் பாதுகாப்பு விதிகளில் மாற்றங்களை முன்மொழிந்துள்ளது.
- ❖ ஆறு மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களில் சுக்ரோஸ் மற்றும் பிரக்டோஸ் சேர்ப்பதைத் தடை செய்ய இந்த முன்மொழிவு முற்படுகிறது.
- ❖ தற்போது, இந்த சர்க்கரைகளை குழந்தைகளின் உணவுகளில் சேர்க்கலாம், அவற்றின் ஒருங்கிணைந்த அளவு மொத்த கார்போஹைட்ரேட்டுகளில் 20% ஆக வரம்பிடப் பட்டு உள்ளது.
- ❖ இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையமானது தேயிலையில்

உள்ள பூச்சிக்கொல்லிகளுக்கான அதிகபட்ச எச்ச வரம்புகளை (MRLs) அசிடாமிப்ரிடுக்கு ஒரு மில்லியனுக்கு 20 பாகங்கள் (ppm) மற்றும் இமிடாக்ளோப்ரிடுக்கு 50 ppm என முன்மொழிந்துள்ளது.

- அதிகபட்ச எச்ச வரம்புகளானது (MRLs) உணவில் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட பூச்சிக் கொல்லி எச்சங்களின் அதிகபட்ச செறிவைக் குறிப்பிடுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## பாங்காக் இணையவழி குற்றத் தடுப்புப் பாதுகாப்பு கட்டமைப்பு

- தாய்லாந்து வங்கியுடன் இணைந்து, சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் உலக வங்கிக் குழுமம் (WBG) தாய்லாந்தின் பாங்காக்கில் பாங்காக் திட்டவரைவை (Bangkok Blueprint) வெளியிட்டன.
- இது டிஜிட்டல் நிதிச் சேவைகளில் இணைய வழியிலான மோசடிகளைத் தடுக்க, கண்டறிய மற்றும் நிவர்த்தி செய்வதற்கான ஒரு கட்டமைப்பை வழங்குகிறது.
- இது சட்ட அடிப்படைகள், மோசடித் தடுப்பு, அமலாக்கம், ஒத்துழைப்பு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு உள்ளிட்ட ஐந்து தூண்களின் கீழ் 12 முக்கியப் பரிசீலனைகளைக் கொண்டுள்ளது.
- இது நாடுகள் முழுவதும் உள்ள அரசாங்கங்கள், நிதி நிறுவனங்கள், சட்ட அமலாக்க முகவர் அமைப்புகள் மற்றும் டிஜிட்டல் தளங்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.
- தாய்லாந்து வங்கியின் ஆளுநரின் கூற்றுப்படி, 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய மோசடி இழப்புகளில் ஆசியா 67% பங்கைக் கொண்டுள்ளது.




## உலக சுகாதார அமைப்பின் பெருந்தொற்று நுண்ணறிவு மைய உத்தி

- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 12 அன்று பெர்லினில் நடைபெற்ற உலக சுகாதார உச்சி மாநாட்டில், உலக சுகாதார அமைப்பானது (WHO) அதன் பெருந்தொற்று மற்றும் கொள்ளைநோய் நுண்ணறிவு மையத்திற்கான ஐந்து ஆண்டு உத்தியை அறிவித்தது.
- உலகளாவிய நோய்த்தொற்று வெடிப்பைக் கண்டறிதல் மற்றும் பதிலளிப்பதை வலுப்படுத்துவதற்காக கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு 2021 ஆம் ஆண்டில் பெர்லினை தளமாகக் கொண்ட இந்த மையம் நிறுவப்பட்டது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் ஒவ்வொரு நாடும் வளர்ந்து வரும் சுகாதார அச்சுறுத்தல்களை 24 மணி நேரத்திற்குள் கண்டறிந்து புரிந்துகொள்ள உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- திறந்த மூலக் கொள்ளைநோய் நுண்ணறிவு, நோய்க்கிருமி கண்காணிப்பு, தரவு அறிவியல், கூட்டுக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பான டிஜிட்டல் அமைப்புகள் ஆகியவை இதன் ஐந்து முன்னுரிமைகளில் அடங்கும்.

- செயற்கை நுண்ணறிவானது (AI) நோய்த்தொற்று வெடிப்பு சமிக்ஞைகளுக்காக பொது ஆதாரங்களை ஸ்கேன்/வருடல் செய்யும், அதே நேரத்தில் 'ஒரே சுகாதாரம்' (One Health) அணுகுமுறையானது மனித, விலங்கு மற்றும் சுற்றுச்சூழல் ஆரோக்கியத்தை இணைக்கிறது.
- இந்த மையம் 160 உறுப்பு நாடுகள் மற்றும் 190 கூட்டாளர் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## எரிபொருள் சேமிப்பிற்கான புதிய முறை




- திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் (IISER) ஆராய்ச்சியாளர்கள் சூடாக்கப்படும் போது ஹைட்ரஜன் மற்றும் மீத்தேன் ஆகியவற்றை வெளியிடும் ஒரு சேர்மத்தை உருவாக்கியுள்ளனர்.
- மெக்னீசியம் ஹைட்ரிடோமெதில்சின்கேட் (magnesium hydridomethylzincate) எனப்படும் இந்த சேர்மத்தில் மெக்னீசியம், துத்தநாகம், ஹைட்ரஜன் மற்றும் கார்பன் ஆகியவை உள்ளன.
- இதனை 100°C வெப்பநிலையில் ஒரு கரைசலில் சூடாக்குவது ஹைட்ரஜனை வெளியிடுகிறது, அதே சமயம் அதன் படிகங்களை 80–110°C வெப்பநிலையில்

கரைப்பான் இல்லாமல் சூடாக்குவது ஹைட்ரஜன் மற்றும் மீத்தேன் இரண்டையும் வெளியிடுகிறது.

- இந்த திடச் சேர்மமானது அதிக அழுத்தத்தின் கீழ் இந்த எரிபொருள் வாயுக்களை கொண்டு செல்வதற்கு ஒரு மாற்று வழியை வழங்கக்கூடும், ஆனால் இது ஈரப்பதத்திற்கு உணர்திறன் கொண்டது.
- வாயுக்களை வெளியிட்ட பிறகு இந்தச் சேர்மத்தை மீண்டும் பயன்படுத்த முடியுமா என்பதை தீர்மானிக்க கூடுதல் ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மேற்குத் தமிழ்நாட்டில் பட்டாம்பூச்சிகள் வலசை போதல்

- வடகிழக்குப் பருவமழை தொடங்கியதையடுத்து சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பெரிய அளவிலான பட்டாம்பூச்சிகள் வலசை போதல் காணப்பட்டது.
- நீல நிற வரியன் பட்டாம்பூச்சி (Blue Tiger), கருநீல வரியன் பட்டாம்பூச்சி (Dark Blue Tiger), வெண்புள்ளிக் கருப்பன் பட்டாம்பூச்சி மற்றும் இரு பட்டை அரளிவிரும்பி பட்டாம்பூச்சி ஆகிய பட்டாம்பூச்சிகள் மேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தை நோக்கி நகர்வது காணப்பட்டது.
- நீல நிற வரியன் பட்டாம்பூச்சிகள் நிமிடத்திற்கு 72 என்ற எண்ணிக்கையில் ராசிபுரத்தைக் கடந்தன, அதே சமயம் கோயம்புத்தூரில் நிமிடத்திற்கு 135 பட்டாம்பூச்சிகள் என்ற அளவில் இதன் வலசைபோதல் காணப்பட்டது.
- இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு (TNBS) 2013 ஆம் ஆண்டு முதல் இந்த வலசை போதல் முறையைக் கண்காணித்து வருகிறது.
- மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் சமவெளிகளை நோக்கிய பின்னோக்கிய நகர்வானது பொதுவாக ஏப்ரல்-மே மாதங்களில் நிகழ்கிறது.




## பருவநிலையைத் தாங்கி வளரும் சோயாபீன் இரகங்கள்

- இந்தூரில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி சபை (ICAR)-தேசிய சோயாபீன் ஆராய்ச்சி நிறுவனம் (NSRI) ஒரு ஹெக்டேருக்கு சுமார் 20 குவிண்டால் ஆரம்ப மகசூல் தரக்கூடிய புதிய சோயாபீன் இரகங்களான NRC 268 மற்றும் NRC 270 ஆகியவற்றைக்

காட்சிப்படுத்தியது.

- NRC 268 மற்றும் NRC 270 ஆகியன மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் உருவாக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட சோயாபீன் (கிளைசின் மேக்ஸ்) இரகங்களாகும்.
- இந்த இரகங்கள் சோயாபீன் உற்பத்தியை அதிகரிப்பதையும், வானிலை தொடர்பான பயிர் இழப்பைக் குறைப்பதையும், விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- NRC 270 ஆனது பெரிய விதைகள், அதிக விதை எடை மற்றும் சிறந்த சந்தை மதிப்பைக் கொண்டுள்ளது.
- இரண்டு இரகங்களும் ஒழுங்கற்ற மழை, வறட்சி காலங்கள், பூச்சிகள் மற்றும் நோய்களைத் தாங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- குறிப்பாக காரிஃப் பருவத்தில் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் போன்ற சோயாபீன் விளையும் மாநிலங்களுக்கு இவை ஏற்றவையாகும்.




## ஊடாடும் புயல் எச்சரிக்கை அமைப்பு




- இந்திய வானிலை ஆய்வுத் துறையானது (IMD) புயல் ஆயத்த நிலையை மேம்படுத்துவதற்காக ஊடாடும் வகையிலான புயல் எச்சரிக்கை மற்றும் கடல்சார் வானிலை சேவைகள் முடிவு ஆதரவு அமைப்பை (DSS) தொடங்கியுள்ளது.

- இந்தத் தளமானது புயல் தடங்கள், காற்றின் வேகம், மழைப்பொழிவு எச்சரிக்கைகள் மற்றும் புயல் எழுச்சித் தகவல் ஆகியவற்றைக் காண்பிக்கும் வலைத்தளப் புவியியல் தகவல் அமைப்பாகும் (WebGIS).
- இது பேரிடர் மேலாண்மை அதிகாரிகள், அரசு அமைப்புகள் மற்றும் பொதுமக்களுக்கு இருப்பிடம் சார்ந்த எச்சரிக்கைகளை வழங்குகிறது.
- இது வெளியேற்ற திட்டமிடல், சரியான நேரத்தில் முடிவெடுத்தல் மற்றும் பேரிடர் அபாயக் குறைப்பு ஆகியவற்றை ஆதரிக்கிறது.
- இதன் வெளியீடானது பைலின் (2013) மற்றும் ஹுத்ஹுத் (2014) புயல்கள் கரையை கடந்ததன் ஆண்டு நிறைவு நாட்களுடன் ஒத்துப்போகிறது.

### பஞ்சார் சமூக வன உரிமைகள்

- இமாச்சலப் பிரதேசத்தின் பஞ்சாரில் சமூக வன வள (CFR) உரிமைகளை அங்கீகரித்தது என்பது வன உரிமைகள் சட்டம், 2006 இன் செயல்பாட்டை எடுத்துக் காட்டுகிறது.
- வன உரிமைகள் சட்டம், 2006 ஆனது காடுகளில் வசிக்கும் பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகளின் உரிமைகளை அங்கீகரிக்கிறது.
- அரசாங்க மற்றும் அறிவியல் ஆதரவுடன் கிராம சபைகள் சமூக வன வள மேலாண்மைத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.
- இந்தத் திட்டங்கள் காடுகள், பல்லுயிர் மற்றும் நீர் ஆதாரங்களைப் பாதுகாப்பதோடு நிலையான வாழ்வாதாரங்கள் மற்றும் பருவநிலை பின்னடைவுத் திறனை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.
- வன நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் முடிவெடுத்தல் ஆகியவற்றில் பெண்களும் இளைஞர்களும் பங்கேற்க வேண்டும்.
- காடுகளின் ஆரோக்கியம், நீர் பாதுகாப்பு, மேம்பட்ட வாழ்வாதாரங்கள் மற்றும் வலுவான உள்ளூர் நிறுவனங்கள் மூலம் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும்.




## அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

### உலகப் பொருளாதாரக் கண்ணோட்டம் 2026

- சர்வதேச நாணய நிதியமானது (IMF) அதன் உலகப் பொருளாதாரக் கண்ணோட்ட

(WEO) அறிக்கையை வெளியிட்டது, அதில் 2026 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வளர்ச்சி முன்னறிவிப்பை உயர்த்தியுள்ளது.

- உலகப் பொருளாதார வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டின் 3.5% உடன் ஒப்பிடுகையில், 2026 ஆம் ஆண்டில் 0.1 சதவீதப் புள்ளிகள் அதிகரித்து 3.1% ஆக இருக்கும் என கணிக்கப் பட்டு ள்ளது.
- 2027 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய வளர்ச்சி 3.4% ஆக மாறாமல் உள்ளது, அதே நேரத்தில் உலகளாவிய பணவீக்கம் 2026 ஆம் ஆண்டில் 4.7% ஐ எட்டும் என கணிக்கப் பட்டுள்ளது.
- ஈரான் போர் மற்றும் அதிகரித்து வரும் எரிசக்தி விலைகள், எரிசக்தியை இறக்குமதி செய்யும் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளை அச்சுறுத்துகின்றன, அதே சமயம் செயற்கை நுண்ணறிவில் (AI) முதலீடு செய்வது சில மேம்பட்ட பொருளாதாரங்களில் வளர்ச்சியை ஆதரிக்கிறது.
- மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியப் பகுதியானது 2026 ஆம் ஆண்டில் 0.3% சுருங்கும் என கணிக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் மேம்பட்ட பொருளாதாரங்கள் 2.1% வளரும் என எதிர்பார்க்கப் படுகிறது.




## மாநிலச் செய்திகள்

### புதிய உயர் நீதிமன்ற அமர்வு – லடாக்


J&K High Court's Ladakh bench to be inaugurated soon; will hear cases from October 21

- கடல் மட்டத்திலிருந்து சுமார் 3,500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள லே (Leh) பகுதியில் லடாக் ஒன்றியப் பிரதேசம் ஓர் உயர் நீதிமன்ற அமர்வைப் பெற்றுள்ளது.
- இந்த அமர்வு 1928 ஆம் ஆண்டு மார்ச் 26 அன்று நிறுவப்பட்ட ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றத்திற்குச் சொந்தமானதாகும்.

- ❖ லடாக் 2019 ஆம் ஆண்டில் ஒரு தனி ஒன்றியப் பிரதேசமாக மாறியது, அதன் பிறகு உயர் நீதிமன்றம் ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்றம் என மறுபெயரிடப்பட்டது.
- ❖ லடாக்கின் தொலைதூர மற்றும் மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதை இந்த அமர்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ போதிய வசதிகள் கிடைத்தவுடன் காணொளி காட்சி மூலம் ஒரே நாளில் லடாக்கின் விவகாரங்களை விசாரிக்க உச்ச நீதிமன்றம் திட்டமிட்டுள்ளது.

# இதரச் செய்திகள்

## கெகோவா தீவு கப்பல் சிதைவு கண்டுபிடிப்பு

- ❖ துருக்கியின் தெற்கே உள்ள அண்டால்யாவின் கெகோவா தீவுக்கு அருகே ஆரம்பகால வெண்கலக் காலத்தைச் சேர்ந்த 4,400-4,700 ஆண்டுகள் பழமையான உலகின் பழமையான கப்பல் சிதைவை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.
- ❖ இந்தக் கப்பல் சுமார் 10 மீட்டர் நீளம் கொண்டது மற்றும் ஆம்போரே (amphorae) எனப்படும் 30 க்கும் மேற்பட்ட பீங்கான் சேமிப்புப் பானைகள் மற்றும் மூன்று கல் நங்கூரங்களை சுமந்து சென்றது.
- ❖ கப்பலின் மரக் கட்டமைப்பு அழியாமல் எஞ்சியிருக்கவில்லை; மட்பாண்டங்களின் வடிவம் மற்றும் அலங்காரத்திலிருந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அதன் வயதை மதிப்பிட்டுள்ளனர்.
- ❖ ஆலிவ் எண்ணெய், ஒயின் அல்லது மரப் பிசின்கள் போன்ற பழங்கால வர்த்தகப் பொருட்களை அடையாளம் காண சில பானைகளுக்குள் உள்ள எச்சங்கள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.
- ❖ இந்தக் கண்டுபிடிப்பு ஆரம்பகால மத்திய தரைக்கடல் கடல்சார் வர்த்தகத்திற்கான சான்றுகளை வழங்குகிறது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★